சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 08.10.2025

வா.சா.1 –பாலசுப்பிரமணியன் S/o பாண்டி

OS No.176/2024

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ளவிபரங்கள் அனைத்தும் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். 22.01.2024 தேதியிட்ட கிரைய பத்திரங்களை, 5வது பிரதிவாதியான குமேரேசன் என்பவர் தயாரித்தார். நான் 4ம் பிரதிவாதி தாமேதரனிடம் இருந்து தான் சொத்தை கிரையம் பெற்றேன். 2ம் வாதி வீரபாண்டி, அவருடைய சொத்தை கோகிலா என்ற நபருக்கு அதே தினம் விற்பனை செய்துள்ளார். அந்த சொத்து வழக்கு சொத்து அல்ல. மேற்படி வீரபாண்டி, கோகிலாவிற்கு கொடுத்துள்ள கிரைய பத்திரத்தையும் 5ம் பிரதிவாதி குமரேசன் தான் தயாரித்தார் என்றால் சரிதான். மேற்படி தவறுதலானதற்கும், 3ம் பிரதிவாதியான சார்பதிவாளருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பத்திர பதிவு செய்த விபரங்களை திருத்திகொள்வது என்றால் திருத்தல் பத்திரம் போட்டு கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. பத்திர பதிவு செய்யும் போது 3ம் பிரதிவாதி அதை கவனித்துபதிவு செய்திருக்கவேண்டும். திருத்தல் பத்திரம் பதிவு செய்வதற்கு 4ம் பிரதிவாதி முன்வரவில்லை. இதுதொடர்பாக 2ம் பிரதிவாதியிடம் மேல்முறையீடு செய்யவில்லையா என்றால் செய்யவில்லை. மேற்படி தவறை சரிசெய்வதற்கு திருத்தல் பத்திரம் அல்லது 2ம் பிரதிவாதியிடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யவேண்டும் என்றும்

இந்த வழக்கு மூலமாக எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.10.08 18:16:55 +0530

Sub Judge

Melur